2011 பிப்ரவரி 10] [திரு. துரைமுருகன்]

வந்திருக்கின்றது. நேற்று, 9-2-2011 அன்று 17-45 மணியளவில் பாண்டு என்ற பாண்டுரங்கன் தனது முழங்கால் சட்டையில் பயன்படுத்தப்படும் எலாஸ்டிக் பட்டியை வைத்துக்கொண்டு ஜன்னல் கம்பியில் தூக்குப் போட்டுக் கொண்டான் என்று அரசுக்கு செய்தியினைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஐயம் அரசுக்கும் வந்திருக்கிறது. தூக்குப் போட்டுக்கொண்டவரை உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கிற வழியில் இறந்துவிட்டதாக செய்தியினைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இது குறித்து விசாரித்து, இத்தகைய நிகழ்வுகள் நிகழாவண்ணம் தடுப்பதற்கு எத்தகைய விசாரணைக் கமிஷன் அமைப்பது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு, இனி இத்தகைய நிகழ்வுகள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ள அங்கிருக்கின்ற அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) வட்டார வளர்ச்சி அலுவலர்களுடைய ஊதிய முரண்பாட்டைக் களைவது குறித்த போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று தினங்களாக ஊரக வளர்ச்சித் துறையினைச் சார்ந்திருக்கக்கூடிய வட்டார வளர்ச்சி அலுவலர்களுடைய ஊதிய முரண்பாட்டினைக் களைவதற்கான ஒரு போராட்டத்தை அவர்கள் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அதனால் பல்வேறு அத்தியாவசியப் பணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அரசு அந்தச் சங்கத்தை அழைத்து பேச்சுவார்த்தை நடத்திட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, இது குறித்து அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றீர்கள். தற்போது சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்கள் இல்லை. அமைச்சர் அவர்கள் வந்தவுடன் பதில் சொல்வார்கள்.